# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2015 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம்

---

*(2015 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 02 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2015, மார்ச்சு மாதம் 06 ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

**2015 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம்**

[2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்டது]

ச.வ.ஓ. 36/2014

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 49 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவினை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :- 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 49 ஆம் பிரிவினை திருத்துதல்.

"(2அ) இச்சட்டத்தின் 14அ அல்லது 14ஊ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலை யிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதி ஒன்றுக்கான மறியற் தண்ட னைக்கு அல்லது இதற்கான அட்டவணையின் I ஆம் நிரையின் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட மீன்பிடிப் படகொன்றின் நீளத்தைக் கருத்திற்கொண்டு தீர்மானிக்கப்பட்ட அட்டவணையின் II ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்ட தொகைக்குக் குறையாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் :-

2-PL 008752 -900 (2015/01)

**அட்டவணை**

| *நிரை I* | *நிரை II* |
|---|---|
| **படகின் நீளம்** | **குற்றப் பணங்கள்** |
| *10.3 இலிருந்து 15 மீற்றர்களை விட குறைவானது* | *1.5 மில்லியன் ரூபா* |
| *15 இலிருந்து 24 மீற்றர்களை விட குறைவானது* | *5 மில்லியன் ரூபா* |
| *24 இலிருந்து 45 மீற்றர்களை விட குறைவானது* | *75 மில்லியன் ரூபா* |
| *45 இலிருந்து 75 மீற்றர்கள்* | *120 மில்லியன் ரூபா* |
| *75 மீற்றர்களை விட மேலானது* | *150 மில்லியன் ரூபா"* |

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 52அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.*

**3.** பின்வரும் புதிய பிரிவானது 52 ஆம் பிரிவினை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 52அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் எது எவ்வாறா யிருப்பினும் நீதிவான் நீதிமன்றம் நியாயாதிக் கத்தைக் கொண்டி ருத்தல்.*

*52அ. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 11 ஆம் மற்றும் 14 ஆம் பிரிவுகளில் உள்ளடக்கப்பட்டதற்கு முரணாக எது எவ்வாறிருப் பினும், நீதிவான் நீதிமன்றம் இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தவறுகளை விளங்குவதற்கும் இச்சட்டத்தில் அத்தகைய தவறுகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஏதேனும் குற்றப்பணத்தை விதிப்பதற்குமான நியாயாதிக்கத்தைக் கொண் டிருத்தல் வேண்டும்.".*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்